Strike by Students of Alagappa College

* 317. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the B.A. class Tamil students of Alagappa College at Karaikudi, staged a strike from 3rd August 1968 demanding that English should be their medium of instruction ?

அழகப்பா கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

திரு. என். ஆர். தியாகராஜன் ; மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

காரைக்குடி அழகப்பா கல்லூரி பி.ஏ. வகுப்பு தமிழ் மாணவர்கள் தங்களுக்கு ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென கோரி 1968 ஆகஸ்டு 3-ஆம் தேதிமுதல் வேலை நிறுத்தம் செய்தனரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

Salem Steel Plant

* 318. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any talks were held with Thiru R. Venkataraman, Member of the Planning Commission, regarding Salem Steel Plant; and

(*b*) the details thereof ?

சேலம் உருக்காலைத் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சேலம் உருக்காலை திட்டம் பற்றித் திட்டக் கமிஷன் அங்கத்தினர் திரு. ஆர். வெங்கிட்டராமன் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடந்ததா ?

(இ) விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) திட்டக் குழுவுடன் இது பற்றி விவாதிக்கப்பட்டது.

(இ) கஞ்சமலை இரும்புக் கனி வளத்தை வெளிக்கொணர்ந்து அமைக்க திட்டக் குழு இசைவு தந்துள்ளது.

திரு. என். சுந்தரேச தேவர் : சேலத்தில் கிடைக்கும் இரும்பு உருக்காலைக்கு பயன்படாது என்பதைப் போன்ற வதந்திகள் வருகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வதந்திகளை நாம் நம்பக்கூடாது. அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நம்பக்கூடாது. சேலம் இரும்பை உருக்காலைக்குப் பயன்படுத்தலாம் என்றுதான் இன்றைக்கும் நம்புகிறோம்.

Elementary Grade Teachers

* 319. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the number of Elementary Grade Teachers of this State, promoted as Secondary Grade Teachers as on 1—1—1969 in observance of the Government's plan to promote all Elementary Grade Teachers to Secondary Grade ?